**செய்தி வெளியீடு எண்: 478** **நாள்:25.6.2008**

செய்தி வெளியீடு

**உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் அனைத்து மாவட்ட பறக்கும்படை வட்டாட்சியர்களுக்கும் மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்கள் பயிற்சியை துவக்கி வைத்து சிம்கார்டு வழங்கினார்கள்**

சென்னை, சேப்பாக்கம், எழிலகத்தில் உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் கீழ் பல்வேறு மாவட்டங்களில் பணியாற்றும் பறக்கும்படை வட்டாட்சியர்களுக்கு இன்று (25.06.2008) காலை 11.30 மணியளவில் அத்தியாவசியப் பொருட்கள் பராமரிப்பு சட்டம், 1955, நுகர்வோர் பாதுகாப்பு சட்டம், 1986 மற்றும் கள்ளச்சந்தை தடுப்புக் காவல் சட்டம், 1980 ஆகிய சட்டங்களை கொண்டு உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையில் நடைபெறும் குற்றங்களை தடுக்க எவ்விதத்தில் பயன்படுத்த வேண்டும் என்பது தொடர்பாக பயிற்சி அளிக்கப்பட்டது.

இப்பயிற்சி வகுப்பினை துவக்கி வைத்து மாண்புமிகு உணவு அமைச்சர் திரு.எ.வ. வேலு அவர்கள் உரையாற்றுகையில் பறக்கும்படை வட்டாட்சியர்களின் பணிகளுக்கென இவ்வரசு பதவியேற்றவுடன் 20 வாகனங்களை வழங்கியுள்ளது என்றும், 2008–2009ஆம் ஆண்டு சட்டப்பேரவையில் அறிவித்துள்ளபடி அனைத்து பறக்கும்படை வட்டாட்சியர்களுக்கும் அமுலாக்கப்பணி மேற்கொள்ள ஏதுவாக செல்லிடத் தொலைபேசி இணைப்பு சிம் கார்டுகளையும், ஆணைகளையும் வழங்கினார்கள். இந்த செல்லிடத் தொலைபேசி எண்களை பத்திரிகை செய்திகள் மூலம் வெளியிட்டு பொதுமக்கள் கடத்தல் பற்றிய தகவல்களை உடனுக்குடன் தெரிவிக்கும் வகையில் விளம்பரப்படுத்தப்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்கள். சென்னை ஆணையர் அலுவலகத்தில் பறக்கும்படை கண்காணிப்பாளர் தொலைபேசி எண்.9445045601. சென்னை வடக்கு மாவட்ட பறக்கும்படை கண்காணிப்பாளர் எண்.94445045602. சென்னை தெற்கு மாவட்ட பறக்கும்படை கண்காணிப்பாளர் எண்.9445045603 ஆகும். பிற தொலைபேசி எண்கள் அரசு இணையதள **consumer.tn.gov.in**.ல் வெளியிடப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்கள்.

ஒவ்வொரு பறக்கும்படை வட்டாட்சியரும் 40 நியாயவிலைக் கடைகளில் தணிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும், அத்தியாவசியப் பொருட்கள் கடத்தலை நேரடியாக தடுக்கக் கூடிய ஆற்றல் பறக்கும்படை வட்டாட்சியர்களுக்கு தான் உள்ளது என்றும், எனவே, அவர்கள் இப்பணியை திறம்பட மேற்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தினார்கள்.

மேலும், போலி குடும்ப அட்டைகள் களையப்பட வேண்டும் என்றும், நுகர்பொருள் வாணிபக் கழகக் கிடங்குகள் மற்றும் கூட்டுறவு சேமிப்பு மையங்களிலிருந்து நியாயவிலைக் கடைகளுக்கு அனுப்பப்படும் அத்தியாவசியப் பொருட்களை எடுத்துச் செல்லும் வாகனங்களை திடீர் சோதனை செய்ய வேண்டும் என்றும், நியாயவிலைக் கடைகள் உரிய நேரத்தில் திறக்கப்படுகின்றனவா என்பதை உறுதி செய்யப்பட வேண்டும் மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகக் கிடங்குகள், அரிசி ஆலைகள் ஆகியவைகளில் திடீர் தணிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும், உணவுப்பொருட்கள் பதுக்கல் தொடர்பான தகவல்களை இரகசியமாக சேகரிக்க வேண்டும் என்றும், உணவுப் பொருட்கள் கடத்தலை தடுக்க வாகன சோதனை செய்ய வேண்டும் என்றும், அவ்வாறு கடத்தலில் ஈடுபடும் லாரிகள், ஆட்டோக்கள், இருசக்கர வாகனங்களின் உரிமங்களை இரத்து செய்வதோடு, கடத்தல் ஊர்தி ஓட்டுநர்கள் உரிமங்களையும் இரத்து செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், மொத்த மற்றும் சில்லரை மண்ணெண்ணெய் வணிக நிலையங்களிலும் தணிக்கை மேற்கொள்ளவேண்டும் என்றும், சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் துவரம் பருப்பு, உளுந்து, பாமாயில், செறிவூட்டப்பட்ட கோதுமை மாவு போன்ற அனைத்து பொருட்களும் எல்லா நியாயவிலைக் கடைகளிலும் இருப்பு உள்ளதா என்பதையும் கண்காணிக்க வேண்டும் என்றும், மாநில எல்லையோரங்கள், சோதனைச் சாவடிகள் ஆகிய இடங்களில் தீவிர தணிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும், கடத்தலில் ஈடுபட்டு தண்டனை பெற்று விடுதலையானவர்களை கண்காணிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்கள்.

மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களின் உரையைத் தொடர்ந்து உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளர் திரு. க. இராஜாராமன், இ.ஆ.ப., இணை ஆணையாளர் திரு. சுந்தரமூர்த்தி, இ.ஆ.ப., துணை ஆணையர் திரு. முரளிதரன் ஆகியோர் பயிற்சி வகுப்பினை தொடர்ந்து நடத்தினார்கள்.

***********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை .சென்னை–09 .**